ஆட்சித்தமிழ்
ஐ.ஏ.எஸ் அகாடெமி

RAGS/2022

Question Booklet No: 7

பதிவு எண் | | | | | | | | | | |

2022

# பொதுத் தமிழும் பொது அறிவும்
## (மாதிரி வினாத்தாள் - 7)

கால அளவு : மூன்று மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 300

வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு: 200 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. பகுதி - அ வில் குறைந்தபட்ச மதிப்பெண் (40% அதாவது 60 மதிப்பெண்) பெறாத தேர்வர்களின் பகுதி - ஆ விற்கான விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது. பகுதி - அ வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களின் பகுதி ஆ-வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் மட்டும் தரவரிசை பட்டியலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.
4. விடையளிக்கத் தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
5. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
6. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
7. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
8. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
9. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
10. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
11. குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
12. கேள்வி வரிசை எண்கள். 101 முதல் 200 வரை (பகுதி - ஆ) ஆங்கில வடிவே இறுதியானது.
13. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

ஐ

SPACE FOR ROUGH WORK

1. வருக்கை என்பதன் பொருள் யாது?
(A) மாம்பழம்
(B) பலாப்பழம்
(C) வாழைப்பழம்
(D) அன்னாசிப் பழம்
(E) விடை தெரியவில்லை

2. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ள இணை எது?
(A) வருக்கை - இருக்கை
(B) புள் - தாவரம்
(C) அள்ளல் - சேறு
(D) மடிவு - தொடக்கம்
(E) விடை தெரியவில்லை

3. யாமரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?
(A) குறிஞ்சி
(B) மருதம்
(C) நெய்தல்
(D) பாலை
(E) விடை தெரியவில்லை

4. தொடை எத்தனை வகைகளைக் கொண்டது?
(A) ஆறு
(B) ஐந்து
(C) எட்டு
(D) ஏழு
(E) விடை தெரியவில்லை

5. இளமையில் கல் - இது எவ்வகைத் தொடர்?
(A) செய்தித் தொடர்
(B) கட்டளைத் தொடர்
(C) வினாத் தொடர்
(D) உணர்ச்சித் தொடர்
(E) விடை தெரியவில்லை

6. சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது எவற்றில்?
(A) சொற்றொடர் (அ) தொடர்
(B) வேற்றுமைத்தொகை
(C) வினைத்தொகை
(D) பண்புத்தொகை
(E) விடை தெரியவில்லை

7. காலம் காட்டும் இடைநிலையும், பெயரெச்ச விகுதியும் மறைந்து வருவது ......
(A) உவமைத்தொகை
(B) உம்மைத்தொகை
(C) பண்புத் தொகை
(D) வினைத்தொகை
(E) விடை தெரியவில்லை

8. உம் என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருள் தருவது
(A) உம்மைத்தொகை
(B) பண்புத்தொகை
(C) வினைத்தொகை
(D) உவமைத்தொகை
(E) விடை தெரியவில்லை

9. பொருத்துக

| | |
|---|---|
| (a) விளித்தொடர் | 1. வரைந்த ஓவியம் |
| (b) வினைமுற்றுத் தொடர் | 2. தேடிப் பார்த்தான் |

(c) பெயரெச்சத் தொடர் — 3. நண்பா படி
(d) வினையெச்சத் தொடர் — 4. சென்றனர் வீரர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

10. பொருத்துக

(a) வேற்றுமை தொகாநிலைத் தொடர் — 1. சாலவும் நன்று
(b) இடைச்சொல் தொடர் — 2. நன்று நன்று நன்று
(c) உரிச்சொல் தொடர் — 3. கவிதையை எழுதினார்
(d) அடுக்குத் தொடர் — 4. மற்றுப்பிற

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

11. நாவின் இடைப்பகுதி, நடுஅண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் __________ .

(A) ப், ம் (B) ர், ழ்
(C) ச், ஞ் (D) ற், ன்
(E) விடை தெரியவில்லை

12. பொருந்துக: (தொகைமரபு)

a) மக்கள் — 1. மந்தை
b) ஆ — 2. தோப்பு
c) ஆடு — 3. நிரை
d) பனை — 4. கூட்டம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

13. பொருத்துக: (வினைமரபு)

a) சோறு — 1. முடை
b) முறுக்கு — 2. எழுப்பு
c) சுவர் — 3. உண்
d) கூடை — 4. தின்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

14. பொருத்துக:

a) ஒலிபிறப்பியல் — 1. Articulatory Phonetics
b) மெய்யொலி — 2. Consonant
c) மூக்கொலி — 3. Nasal consonant sound
d) உயிரொலி — 4. Vowel

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

15. ஒரு சொல்லோ சொற்றொடரோ இருபொருள்பட வருவது .................... எனப்படும்.
(A) சிலேடை அணி
(B) தீவக அணி
(C) உவமை அணி
(D) உருவக அணி
(E) விடை தெரியவில்லை

16. எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்துகையில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(A) இலக்கணை
(B) இணை ஒப்பு
(C) எதிரிணை இசைவு
(D) முரண்பாடு மெய்ம்மை
(E) விடை தெரியவில்லை

17. ‘உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்’ இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகை?
(A) செய்யுளிசை அளபெடை
(B) இன்னிசை அளபெடை
(C) சொல்லிசை அளபெடை
(D) இசைநிறை அளபெடை
(E) விடை தெரியவில்லை

18. “காய்மணி யாகு முன்னர்க்
காய்ந்தனக் காய்ந்தேன் வாடித்” என்ற பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
(A) பெரியபுராணம்
(B) சீவகசிந்தாமணி
(C) சீறாப்புராணம்
(D) தேம்பாவணி
(E) விடை தெரியவில்லை

19. ‘விரிந்தென கொம்பில் கொய்த
வீயென உள்ளம் வாட’ இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
(A) கம்பராமாயணம்
(B) தேம்பாவணி
(C) சீவக சிந்தாமணி
(D) சீறாப்புராணம்
(E) விடை தெரியவில்லை

20. "உய்முறை அறியேன்; ஓர்ந்த
உணர்வினொத்து உறுப்பும் இல்லா" என்று பாடியவர் யார்?
(A) கம்பர்
(B) திருத்தக்கதேவர்
(C) வீரமாமுனிவர்
(D) ஜி.யு.போப்
(E) விடை தெரியவில்லை

21. "கைமுறை அறிந்தேன் தாயும்
கடிந்தெனைத் தனித்துப் போனாள்" இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல்?
(A) தேம்பாவணி
(B) கம்பராமாயணம்
(C) சீவகசிந்தாமணி
(D) மணிமேகலை
(E) விடை தெரியவில்லை

22. "உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே" என்று பாடியவர் யார்?
(A) வீரமாமுனிவர்
(B) ஜி.யு.போப்
(C) கம்பர்
(D) இளங்கோவடிகள்
(E) விடை தெரியவில்லை

23. திருமலை, திருப்பள்ளியெழுச்சி பாடியவர் யார்?
(A) தொண்டரடிப் பொடியாழ்வார்
(B) மதுரகவியாழ்வார்
(C) திருமங்கையாழ்வார்
(D) குலசேகர ஆழ்வார்
(E) விடை தெரியவில்லை

24. பெருமாள் திருமொழி பாடியவர் யார்?
(A) நம்மாழ்வார்
(B) குலசேகர ஆழ்வார்
(C) ஆண்டாள்
(D) திருமழிசையாழ்வார்
(E) விடை தெரியவில்லை

25. பொருத்துக:
(a) திருஞானசம்பந்தர் - 1. பிள்ளை நெறி
(b) சுந்தரர், திருமழிசையாழ்வார் - 2. நாயகன், நாயகி நெறி
(c) மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் - 3. தோழமை நெறி
(d) திருநாவுக்கரசர், குலசேகர ஆழ்வார்
தொண்டரடிப்பொடியாழ்வார் - 4. அடிமை நெறி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

26. படைக்கல மாகவுன் நாமத் தெழுத்தஞ்சுஎன் நாவிற் கொண்டேன்;
இடைக்கல மல்லேன்; எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்; .......... எனப்பாடியவர் யார்?
(A) திருஞான சம்பந்தர்
(B) திருநாவுக்கரசர்
(C) மாணிக்கவாசகர்
(D) சுந்தரர்

(E) விடை தெரியவில்லை

27. இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டு இறக்கம் செய்வான்.......... என்ற பாடலைப் பாடியவர் யார்?
(A) காரைக்காலம்மையார்
(B) பூதத்தாழ்வார்
(C) பேயாழ்வார்
(D) ஆண்டாள்
(E) விடை தெரியவில்லை

28. ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்றன் நாமங்கள்
தானத்தால் மற்றவின் பேர் சாற்றினால் - வானத் ......... என்று
................................................
பணியமரர் கோமான் பரிசு
என பாடிய ஆழ்வார் யார்?
(A) தொண்டரடிப் பொடியாழ்வார்
(B) பூதத்தாழ்வார்
(C) பெரியாழ்வார்
(D) ஆண்டாள்
(E) விடை தெரியவில்லை

29. குடிமக்கள் காப்பியம் என போற்றப்படும் நூல் எது?
(A) மணிமேகலை
(B) தொல்காப்பியம்
(C) சிலப்பதிகாரம்
(D) சீவக சிந்தாமணி
(E) விடை தெரியவில்லை

30. “மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்கு...” என்ற சிலப்பதிகார பாடலில் கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
(A) ஒலிக்கும் கடல்
(B) அச்சம் தரும் கடல்
(C) குறைக்கும் கடல்
(D) குளிர் தரும் கடல்
(E) விடை தெரியவில்லை

31. பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் எது?
(A) பரணி
(B) புறநானூறு
(C) பிள்ளைத்தமிழ்
(D) கலம்பகம்
(E) விடை தெரியவில்லை

32. எட்டுத்தொகை நூல்களுள் தவறானது எது?
(A) பதிற்றுப்பத்து
(B) குறுந்தொகை
(C) மலைபடுகடாம்
(D) பரிபாடல்
(E) விடை தெரியவில்லை

33. ‘வலம்புரி மூழ்கிய வானதிமில் பரதவர்’ என்ற பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் எது?
(A) அகநானூறு
(B) பட்டினப்பாலை
(C) பெரும்பாணாற்றுப்படை
(D) மதுரைக்காஞ்சி
(E) விடை தெரியவில்லை

34. “பொறிமயிர் வாரணம்.....
கூட்டுறை வயமாப் புலியொடு குழும” என்ற அடிகளின் மூலமாக மதுரையில் வனவிலங்கு சரணாலயம் இருந்த செய்தியைக் கூறும் நூல் எது?

(A) புறநானூறு
(B) சிலப்பதிகாரம்
(C) பரிபாடல்
(D) மதுரைக்காஞ்சி
(E) விடை தெரியவில்லை

35. “கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உளவாய் வார்த்தை உடம்பு தொடாது” என்று
(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) கண்ணதாசன்
(D) வண்ணதாசன்
(E) விடை தெரியவில்லை

36. ‘கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே’ இப்பாடலடிகளை இயற்றியவர் யார்?
(A) கண்ணதாசன்
(B) வள்ளலார்
(C) பாரதியார்
(D) பாரதிதாசன்
(E) விடை தெரியவில்லை

37. ‘ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே’ என்று பாடியவர் யார்?
(A) வள்ளலார்
(B) வாணிதாசன்
(C) பாரதிதாசன்
(D) பாரதியார்
(E) விடை தெரியவில்லை

38. ‘அறமும் அரசியலும்’ என்ற நூலின் ஆசிரியர் யார்?
(A) திரு.வி.க.
(B) கவிமணி
(C) மு.வ.
(D) ஈ.வெ.ரா.
(E) விடை தெரியவில்லை

39. “செந்தமிழைச் செழுந்தமிழாய் செய்வதுவும் வேண்டும்” என்ற பாடல் வரிகளுடன் தொடர்புடையவர் யார்?
(A) பாரதிதாசன்
(B) பாரதியார்
(C) சுரதா
(D) பெருஞ்சித்திரனார்
(E) விடை தெரியவில்லை

40. “எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்” என்று பாடியவர் யார்?
(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) பெருஞ்சித்திரனார்
(D) முடியரசன்
(E) விடை தெரியவில்லை

41. “குரங்கு குடியிருக்கும் கொம்பில் கனிபறிக்கும்
மரங்கள் வெயில்மறைக்கும் கிளியே”
என்ற பாடல் வரியை எழுதியவர் யார்?
(A) சுரதா
(B) வாணிதாசன்
(C) முடியரசன்
(D) பாரதிதாசன்
(E) விடை தெரியவில்லை

42. “நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ! கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி” என்ற பாடல் வரிகளை இயற்றியவர் யார்?
(A) பாரதியார் (B) சுரதா
(C) பாரதிதாசன் (D) வாணிதாசன்
(E) விடை தெரியவில்லை

43. ‘மதம், கடவுள் ஆகியவற்றின் தொடர்பற்ற இலக்கியம், யாவருக்கும் பொதுவான இயற்கை அறிவைத் தரும் இலக்கியம், யாவரும் மறுக்க முடியாத அறிவியல் பற்றிய இலக்கியம் ஆகியவற்றின் மூலம்தான் ஒரு மொழியும் அதன் இலக்கியங்களும் மேன்மை அடைய முடியும். அத்துடன் அதனைக் கையாளும் மக்களும் அறிவுடையவராவர்’ என்று கூறியவர் யார்?
(A) அண்ணல் அம்பேத்கர்
(B) பாரதியார்
(C) தந்தை பெரியார்
(D) திரு.வி. கலியாண சுந்தரனார்
(E) விடை தெரியவில்லை

44. பெரியார் எந்த நூலை மதிப்புமிக்க நூலாக கருதினார்?
(A) தொல்காப்பியம் (B) திருக்குறள்
(C) புறநானூறு (D) சிலப்பதிகாரம்
(E) விடை தெரியவில்லை

45. ‘திருக்குறளில் அரசியல், சமூகம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தும் அடங்கியுள்ளன. இதை ஊன்றிப் படிப்பவர்கள் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள்’ என்று கூறியவர் யார்?
(A) திரு.வி. கலியாண சுந்தரனார் (B) கி.ஆ.பெ. விசுவநாதம்
(C) தந்தை பெரியார் (D) மு. வரதராசனார்
(E) விடை தெரியவில்லை

46. “மொழி என்பது உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும்; அக்கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும்; அவ்வப்போது கண்டுபிடித்துக் கைக்கொள்ள வேண்டும்” என்று கூறியவர் யார்
(A) பாரதிதாசன் (B) பாரதியார்
(C) பெரியார் (D) காந்தியடிகள்
(E) விடை தெரியவில்லை

47. தினசரி வழக்கமாகிவிட்டது
தபால் பெட்டியைத்
திறந்து பார்த்துவிட்டு
வீட்டுக்குள் நுழைவது
இரண்டு நாட்களாகவே
எந்தக் கடிதமும் இல்லாத
ஏமாற்றம்.......... இக்கவிதையின் ஆசிரியர்..........
(A) வண்ணதாசன் (B) இன்குலாப்
(C) கல்யாண்ஜி (D) பிரமிள்
(E) விடை தெரியவில்லை

48. ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்ற நூலின் ஆசிரியர் யார்
(A) மு.மேத்தா
(B) புவியரசு
(C) இன்குலாப்
(D) சிற்பி பாலசுப்பிரமணியம்
(E) விடை தெரியவில்லை

49. எளிய மனிதர்களின் பண்புநலன்களை நுட்பமாகப் பதிவுசெய்தவர் யார்?
(A) கவிஞர் நகுலன்
(B) கு.அழகிரிசாமி
(C) தி.ஜானகிராமன்
(D) சுந்தரராமசாமி
(E) விடை தெரியவில்லை

50. ‘ஏற்பாடு’ என்பதன் பொருள்
(A) சூரியன் உதிக்கும் நேரம்
(B) ஏற்றப்பாட்டுப்பாடுதல்
(C) சந்திரன் தோன்றும் நேரம்
(D) சூரியன் மறையும் நேரம்
(E) விடை தெரியவில்லை

51. ‘கோவலன் பொட்டல்’ என வழங்கப்படும் இடம்
(A) கோவலன் பொட்டலம் விரித்து உணவு அருந்திய இடம்
(B) கோவலன் கொலைக்களப்பட்ட இடம்
(C) கோவலன் சிலம்பு விற்க வந்த இடம்
(D) கண்ணகி கோவலன் வாழ்ந்த இடம்
(E) விடை தெரியவில்லை

52. திரு.வி.கல்யாணசுந்தரனாரின் பயண இலக்கிய நூல் எது?
(A) யான் கண்ட இலங்கை
(B) எனது இலங்கைச் செலவு
(C) யான் கண்ட ஜப்பான்
(D) உலகம் சுற்றிய தமிழன்
(E) விடை தெரியவில்லை

53. “பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்” இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி
(A) இரட்டுற மொழிதல் அணி
(B) மடக்கணி
(C) நிரனிறை அணி
(D) ஏகதேச உருவக அணி
(E) விடை தெரியவில்லை

54. கால்டுவெல் திராவிட மொழிகளை எவ்வாறு பகுத்து விளக்குகிறார்?
(A) வளர்ந்த மற்றும் வளராத மொழிகள்
(B) திருந்திய மற்றும் திருந்தா மொழிகள்
(C) கலப்பு மற்றும் கலப்பல்லாத மொழிகள்
(D) கட்டு மற்றும் கட்டற்ற மொழிகள்

(E) விடை தெரியவில்லை

55. மலைக் குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்தவர்கள்
(A) பழைய கற்கால மக்கள்
(B) நுண்கற் கருவிக்கால மக்கள்
(C) புதிய கற்கால மக்கள்
(D) பெருங்கற்கால மக்கள்
(E) விடை தெரியவில்லை

56. சொல்லில் பொருள் சிறந்து நிற்கும் பகுதி
(A) வேர்
(B) அடி
(C) விகுதி
(D)சந்தி
(E) விடை தெரியவில்லை

57. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பற்றிப் பாடிய நூல்
(A) சிறுபாணாற்றுப்படை
(B) பட்டினப்பாலை
(C) பொருநராற்றுப்படை
(D) மதுரைக்காஞ்சி
(E) விடை தெரியவில்லை

58. சித்தன்னவாசலில் குடவரைக் கோயில் இருக்குமிடம்
(A) ஆர்மாமலை
(B) சிறு அண்ணல் வாயில்
(C) ஏழடிப் பட்டம்
(D) கந்தக் குடி
(E) விடை தெரியவில்லை

59. ஓங்க - என்னும் வேர்ச்சொல்லின் வியங்கோள் வினைமுற்றை எழுதுக :
(A) ஓங்குக
(B) ஓங்கு
(C) ஓங்குதல்
(D) ஓங்கி
(E) விடை தெரியவில்லை

60. "திருத்தொண்டர் மாக்கதை" எனும் அடைமொழியால் அழைக்கப்பெறும் நூல் யாது?
(A) பெரிய புராணம்
(B) கந்த புராணம்
(C) சீறாப்புராணம்
(D) அரிச்சந்திர புராணம்
(E) விடை தெரியவில்லை

61. 'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்'
-இப்பாடலடிகளில்
(A) இயைபு, மோனை அமைந்துள்ளது
(B) எதுகையும் மோனையும் அமைந்துள்ளது
(C) இயைபு, எதுகை, மோனை அமைந்துள்ளன

(D) இயைபு மட்டும் அமைந்துள்ளது
(E) விடை தெரியவில்லை

62. புலவராற்றுப்படை என்ற அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல்
(A) திருமுருகாற்றுப்படை
(B) பொருநராற்றுப்படை
(C) சிறுபாணாற்றுப்படை
(D) பெரும்பாணாற்றுப்படை
(E) விடை தெரியவில்லை

63. அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால் அமைந்த காதல்
கீழ்க்காணும் விடைகளுள் சரியான விடை எது?
(A) எதுகை மட்டும் வந்துள்ளது
(B) எதுகையும், மோனையும் வந்துள்ளது
(C) எதுகை, மோனை, அந்தாதி வந்துள்ளன
(D) மோனை மட்டும் வந்துள்ளது
(E) விடை தெரியவில்லை

64. நூல் - நூலாசிரியர் அறிதல்

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) சயங்கொண்டார் | 1) சடகோபரந்தாதி |
| (b) காரியாசான் | 2) புறநானூறு |
| (c) கம்பர் | 3) கலிங்கத்துப்பரணி |
| (d) கண்ணகனார் | 4) சிறுபஞ்சமூலம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

65. ‘திரைக்கவித் திலகம்’ என்ற சிறப்புக்குரியவர்
(A) வாலி
(B) உடுமலை நாராயண கவி
(C) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
(D) மருதகாசி
(E) விடை தெரியவில்லை

66. கதிர்வேல் வெற்றிலை தின்றான் என்பது
(A) இனங்குறித்தல்
(B) வெளிப்படைச் சொற்கள்
(C) குறிப்புச் செய்திகள்
(D) வெளிகுறிப்புச் சொற்கள்
(E) விடை தெரியவில்லை

67. வரதநஞ்சைப் பிள்ளை தான் இயற்றிய 'தமிழரசி குறவஞ்சி' என்ற நூலை எங்கு அரங்கேற்றினார்?
(A) தமிழ்ச்சங்கம் தஞ்சை
(B) கரந்தை தமிழ்ச்சங்கம்
(C) மதுரை தமிழ்ச்சங்கம்
(D) சென்னை பல்கலைக்கழகம்
(E) விடை தெரியவில்லை

68. சுந்தரம்பிள்ளை அவர்களுக்கு 'ராவ்பகதூர்' - பட்டம் வழங்கிச் சிறப்பித்த அரசு எது?
(A) கேரள அரசு
(B) சென்னை மாகாண அரசு
(C) கர்நாடக அரசு
(D) ஆந்திர அரசு
(E) விடை தெரியவில்லை

69. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குக.
மணம்வைத்தாய், புதுமை, மண்ணில், மலர்க்குள்
(A) மலர்க்குள், புதுமை மண்ணில் மணம்வைத்தாய்
(B) மண்ணில் புதுமை மலர்க்குள் மணம் வைத்தாய்
(C) மணம் வைத்தாய் மலர்க்குள் மண்ணில் புதுமை
(D) மலர்க்குள் புதுமை மணம் வைத்தாய் மண்ணில்
(E) விடை தெரியவில்லை

70. 'உரையிடையிட்ட பாட்டைச் செய்யுள்' என வழங்கப்படும் காப்பியம் எது?
(A) சிலப்பதிகாரம்
(B) மணிமேகலை
(C) சீவகசிந்தாமணி
(D) வளையாபதி
(E) விடை தெரியவில்லை

71. 'சூரிய ஒளி பெறாத செடியும், பகுத்தறிவு ஒளி பெறாத சமுதாயமும் வளர்ச்சி அடையாது' என உணர்ந்தவர்
(A) பாரதி
(B) சுரதா
(C) பாரதிதாசன்
(D) கவிமணி
(E) விடை தெரியவில்லை

72. "இயல்பானது" வேர்சொல்லறிக
(A) இயல்
(B) இயல்பு
(C) இயைபு
(D) இய
(E) விடை தெரியவில்லை

73. பெரியபுராணத்திற்கு சேக்கிழாரிட்டப் பெயர்
(A) சிவதொண்டர் புராணம்
(B) சிவனடியார் புராணம்
(C) திருத்தொண்டர் புராணம்
(D) தொண்டர்சீர் புராணம்
(E) விடை தெரியவில்லை

74. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை பரிசு பெற்ற சுரதாவின் நூல் எது?
(A) துறைமுகம்
(B) சுவரும் சுண்ணாம்பும்
(C) தேன்மழை
(D) சுரதாவின் கவிதைகள்
(E) விடை தெரியவில்லை

75. உதடுகள் இரண்டும் பொருந்துவதனால் பிறக்கும் எழுத்துக்கள்
(A) க் ங்
(B) ஞ் ட்
(C) ய் ர்
(D) ப் ம்
(E) விடை தெரியவில்லை

76. "நற்கலை" என்று அழைக்கப்படும் கலை
(A) கட்டடக் கலை
(B) சிற்பக்கலை
(C) ஓவியக் கலை
(D)அழகுக் கலை
(E) விடை தெரியவில்லை

77. "களி இன்ப நல்வாழ்வு கொண்டு - கன்னித் தமிழுக்கு ஆற்றுக தொண்டு" - என்று பாடியவர்
(A) பாரதியார்
(B) கோ. அ. அப்துல் லத்தீப்
(C) முடியரசன்
(D)பாரதிதாசன்
(E) விடை தெரியவில்லை

78. அவன் பொன்னன் - எவ்வகைப் பெயர்
(A) பொருட்பெயர்
(B) இடப் பெயர்
(C) காலப் பெயர்
(D) தொழில் பெயர்
(E) விடை தெரியவில்லை

79. "பெருஞ் சூலையினால், ஆட்கொள்ள, அடைந்துய்ந்த தெருளும் உணர்வில்லாத சிறுமையேன் யான் என்றார்" - இவ்வடிகள் யாரை குறிப்பிடுகிறது?
(A) சம்பந்தர்
(B) சுந்தரர்
(C) மாணிக்கவாசகர்
(D) நாவுக்கரசர்
(E) விடை தெரியவில்லை

80. இயற்பெயர் கண்டறிக
(a) பாரதியார் 1. ராஜு கோபாலன்
(b) பாரதிதாசன் 2. அரங்கசாமி
(c) சுரதா 3. சுப்புரத்தினம்
(D) வாணிதாசன் 4. சுப்பிரமணியன்

| | (a) | (b) | (c) | (D) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

81. 'Snacks' - என்ற ஆங்கில சொல்லிற்கு பொருத்தமான தமிழ்ச் சொல்லைத் தேர்க
(A) சிற்றுண்டி
(B) சிற்றுணா
(C) சிற்றுணவு
(D) சீரான உணவு
(E) விடை தெரியவில்லை

82. தெய்வக் கவிஞர் என்றால் .................. என்று பொருள்படும்.
(A)திவ்வியகவி
(B) அழகியமணவாளதாசர்
(C) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்
(D) குமரகுருபரர்
(E) விடை தெரியவில்லை

83. மடப்பிடி யார்?
(A) சீதை
(B) பாஞ்சாலி
(C) மாதவி
(D) கண்ணகி
(E) விடை தெரியவில்லை

84. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்க !
"நாய்க்கால் சிறுவிரல் போல் நன்கணியராயினும்"
(A) வெறுப்பூட்டுவர்
(B) உதவமாட்டார்
(C) துன்புறுத்துவர்
(D) நட்பு கொள்ளார்
(E) விடை தெரியவில்லை

85. 'தென்னவன் பிரமராயன்' என்ற விருதிற்கு உரியவர்
(A) திருநாவுக்கரசர்
(B) சுந்தரர்
(C) மாணிக்கவாசகர்
(D) திருஞான சம்பந்தர்
(E) விடை தெரியவில்லை

86. கவிஞர் தாரா பாரதி எழுதாத கவிதை நூல் இது.
(A) புதிய விடியல்கள்
(B) இது எங்கள் கிழக்கு
(C) சொந்தச் சிறைகள்
(D) இன்னொரு சிகரம்
(E) விடை தெரியவில்லை

87. கீழ்க்காண்பனவற்றுள் எத்தொடர் பிறமொழிச் சொல் கலவாதது?
(A) ஆசிரியர் அனுமதி பெற்று வேலன் விடுப்பு எடுத்தான்
(B) ஒப்பனை செய்து கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி
(C) அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச்சிறந்த நிபுணர்
(D)அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது
(E) விடை தெரியவில்லை

88. “தென்னம் பொருப்பின் தலைவ வாழி” என்னும் அடியில் தென்னம் பொருப்பு குறிப்பது
(A) குடகு மலை
(B) பொதிகை மலை
(C) ஜவ்வாது மலை
(D) ஆனை மலை
(E) விடை தெரியவில்லை

89. “தான் நேரில் கண்டும் கேட்டும் அறிந்துள்ள செய்திகளைச் சித்திரகுப்தனைப் போல் ஒன்று விடாமல் குறித்து வைத்துள்ளவர்” என ஆனந்தரங்கனைப் பாராட்டியவர்
(A) பரிதிமாற் கலைஞர்
(B) மறைமலையடிகள்
(C) வ.வே.சு
(D) பாவாணர்
(E) விடை தெரியவில்லை

90. இலக்கணக் குறிப்பு தருக.
எய்தி
(A) பெயரெச்சம்
(B) வினையெச்சம்
(C) பண்புத் தொகை
(D) வினைத் தொகை
(E) விடை தெரியவில்லை

91. கூற்று: 1 சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர்
கூற்று: 2 பெரியபுராணத்திற்கு சேக்கிழார் இட்டபெயர் திருத்தொண்டர் புராணம்
(A) கூற்று 1 மட்டும் சரி
(B) கூற்று 2 மட்டும் சரி
(C) கூற்று இரண்டும் தவறு
(D) கூற்று இரண்டும் சரி
(E) விடை தெரியவில்லை

92. காமராசர் முதல் அமைச்சராகப் பதவி ஏற்ற ஆண்டு எது?
(A) 1954
(B) 1955
(C) 1956
(D) 1964
(E) விடை தெரியவில்லை

93. அகர வரிசையில் அமைந்துள்ள சொற்களைக் கண்டறிக
(A) சார்பு, சிறுகதை, சூடாமணி, செவ்வாழை, சோளம்
(B) செவ்வாழை, சோளம், சிறுகதை, சார்பு, சூடாமணி

(C) சிறுகதை, சூடாமணி, சிறுகதை, சோளம், சார்பு
(D) சிறுகதை, சார்பு, சோளம், செவ்வாழை, சூடாமணி
(E) விடை தெரியவில்லை

94. “நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
இவையிவை யுடை நந்தி” - இத்தொடரில் ‘நந்தி’ என்ற சொல் குறிப்பிடும் சான்றோர் யார்?
(A) நந்தீஸ்வரன்
(B) நந்திவர்மன்
(C) நந்திதெய்வம்
(D) நந்தியின் பக்தன்
(E) விடை தெரியவில்லை

95. தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர்
(A) மூவலூர் இராமாமிர்தம்
(B) பண்டித ரமாபாய்
(C) சாவித்திரிபாய் பூலே
(D) நீலாம்பிகை அம்மையார்
(E) விடை தெரியவில்லை

96. பொருந்தாத சொல்லை தேர்வு செய்க
(A) பெறாஅ
(B) தழிஇ
(C) அண்ணன்
(D)கொடுப்பதூஉம்
(E) விடை தெரியவில்லை

97. தமிழகத்தின் ‘வேர்ட்ஸ்வொர்த்’ என்று புகழப்படுபவர்
(A) வாணிதாசன்
(B) வண்ணதாசன்
(C) பாரதிதாசன்
(D) சுப்புரத்தின தாசன்
(E) விடை தெரியவில்லை

98. ‘ஜல்லிக்கட்டு’ என்னும் எருதாட்டத்தை வைத்து ‘வாடிவாசல்’ எனும் நாவலை எழுதியவர் -------.
(A) சி.சு.செல்லப்பா
(B) பி.எஸ்.ராமையா
(C) திரு.வி.க
(D) வ.வே.சு.ஐயர்
(E) விடை தெரியவில்லை

99. மரபுச் சொற்களின் அடிப்படையில் பின்வருவனவற்றுள் எது சரியானது?
(A) ஆட்டுத்தொழுவத்தின் அருகே குயில் கரைவதைக் கேட்டுக் கழுதை கனைத்தது
(B) ஆட்டுப்பட்டி அருகே குயில் கூவியதைக் கேட்ட கழுதை கத்தியது
(C) ஆட்டுப்பட்டி அருகே குயில் கூவியதைக் கேட்ட கழுதை கனைத்தது
(D)ஆட்டுக்கொட்டில் அருகே குயில் கரைவதைக் கேட்டுக் கழுதை கத்தியது
(E) விடை தெரியவில்லை

100. ‘மீதூண் விரும்பேல்’ என்றவர்
(A) பாரதியார்

(B) அதிவீரராம பாண்டியர்
(C) பாரதிதாசன்
(D) ஔவையார்
(E) விடை தெரியவில்லை

101. பொருத்துக.

a. தங்க நாற்கரச் சாலை — 1. சிறிய துறைமுகம்
b. கடலூர் — 2. தனியார் தொலைதொடர்பு நிறுவனம்
c. ஜி.பி.எஸ். — 3. எழுத்து படிவம்
d. பத்திரிக்கைகள் — 4. இடஞ்சுட்டும் கருவி
e. ஏர்செல் — 5. தேசிய நெடுஞ்சாலை

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 5 | 1 | 4 | 3 | 2 |
| (B) | 5 | 3 | 4 | 1 | 2 |
| (C) | 5 | 3 | 4 | 2 | 1 |
| (D) | 5 | 2 | 4 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

Match the following :

a. Golden Quadrilateral — 1. Minor port
b. Cuddalore — 2. Private Telecom
c. GPS — 3. Print media
d. Magazine — 4. Location of place
e. Aircel — 5. National Highway

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 5 | 1 | 4 | 3 | 2 |
| (B) | 5 | 3 | 4 | 1 | 2 |
| (C) | 5 | 3 | 4 | 2 | 1 |
| (D) | 5 | 2 | 4 | 3 | 1 |

(E) Answer not known

102. பொருத்துக.

1. ஏற்றுமதி — a. காஞ்சிபுரம்
2. இறக்குமதி — b. அரியலூர்
3. டைடல் பார்க் — c. இயந்திரங்கள்
4. டான்சில்க் — d. மென்பொருள்
5. சிமெண்ட் — e. சென்னை

(E) விடை தெரியவில்லை

Match the following :

1. Exports — a. Kancheepuram
2. Imports — b. Engine of Growth
3. Tidal Park — c. Machinery
4. Tansilk — d. Software
5. Trade — e. Chennai

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| (A) | d | c | e | a | b |
| (B) | c | d | e | a | b |

(C) b d e a c
(D) b c d a e
(E) Answer not known

103. தமிழ்நாட்டின் அதிக எழுத்தறிவு விகிதம் கொண்ட மாவட்டம் எது ?
(A) கரூர் (B) கன்னியாகுமரி
(C) சென்னை (D) பெரம்பலூர்
(E) விடை தெரியவில்லை
............. has the highest percent of literates in the state.
(A) Karur (B) Kanyakumari
(C) Chennai (D) Perambur
(E) Answer not known

104. தமிழகத்தின் வேளாண் உற்பத்தித்திறன் மற்றும் உணவு உற்பத்தி ஆகிய இரண்டுமே .............
(A) குறைந்துள்ளது (B) நிலையாக இல்லை
(C) நிலையாக உள்ளது (D) அதிகரித்துள்ளது
(E) விடை தெரியவில்லை
Both agricultural productivity and food productivity has .............
(A) decreased (B) not stable
(C) remained stable (D) increased
(E) Answer not known

105. தமிழ்நாட்டின் கம்பம் பள்ளத்தாக்கில் ............... வகை மண் அரிப்பு ஏற்படுகிறது.
(A) காற்று (B) ஆறு
(C) பனியாறு (D) அலை
(E) விடை தெரியவில்லை
In Tamil Nadu sopil erosion by ....... is very common in Kambam Valley.
(A) wind (B) river
(C) glacier (D) wave
(E) Answer not known

106. இந்தியாவில் அதிகபட்ச சூரிய ஆற்றலை உற்பத்தி செய்யும் மாநிலம்
(A) தமிழ்நாடு (B) மேற்கு வங்காளம்
(C) கேரளா (D) ஆந்திரபிரதேசம்
(E) விடை தெரியவில்லை
............ is the state with highest installed solar capacity in India.
(A) Tamil Nadu (B) West Bengal
(C) Kerala (D) Andhra Pradesh
(E) Answer not known

107. எந்த மாநில/யூனியன் பிரதேசத்தின் காவல் துறை முதன்முதலில் ட்ரோன் தடயவியல் ஆய்வகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை தொடங்கியுள்ளது?
(A) மேற்கு வங்கம் (B) குஜராத்
(C) கேரளா (D) டெல்லி
(E) விடை தெரியவில்லை

Which state/UT's police department has launched a first-of-its-kind Drone Forensic Lab and Research Centre?

(A) West Bengal (B) Gujarat
(C) Kerala (D) Delhi
(E) Answer Not Known

108. ஸ்வஸ்த்யா கல்யாண் யோஜனாவின் கீழ் எந்த மாநிலம்/யூனியன் பிரதேசம் சுகாதார பற்று அட்டையை அறிவித்துள்ளது?

(A) கேரளா (B) மேற்கு வங்கம்
(C) ஒடிசா (D) கர்நாடகா
(E) விடை தெரியவில்லை

Which state/UT has announced smart health cards under its Swasthya Kalyan Yojana?

(A) Kerala (B) West Bengal
(C) Odisha (D) Karnataka
(E) Answer Not Known

109. ஆயுர்வேதத்தில் உலகின் முதல் உயிர் வங்கி எந்த மாநிலத்தில்/யூனியன் பிரதேசத்தில் அமைக்கப்பட உள்ளது?

(A) உத்தரகண்ட் (B) உத்தர பிரதேசம்
(C) கோவா (D) புது டெல்லி
(E) விடை தெரியவில்லை

In which state/UT, World's first bio-bank in Ayurveda is going to be set up?

(A) Uttarakhand (B) Uttar Pradesh
(C) Goa (D) New Delhi
(E) Answer Not Known

110. எந்த இந்திய நகரத்தில், உலகின் முதல் சக்கர அருங்காட்சியகம் திறக்கப்பட்டது?

(A) பெங்களூரு (B) மும்பை
(C) கொல்கத்தா (D) லக்னோ
(E) விடை தெரியவில்லை

In which Indian city, the world's first museum on wheels was inaugurated?

(A) Bengaluru (B) Mumbai
(C) Kolkata (D) Lucknow
(E) Answer Not Known

111. சமீபத்தில், பல்வேறு நோக்கங்களுக்காக ட்ரோன்களை பயன்படுத்த சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தால் எந்த அமைப்புக்கு நிபந்தனை அனுமதி வழங்கப்பட்டது?

(A) Bharat Heavy Electricals Limited
(B) Coal India
(C) Steel Authority of India
(D) Rashtriya Ispat Nigam
(E) விடை தெரியவில்லை

Recently, which organization was given conditional permission by the Civil Aviation Ministry to use drones for various purposes?

(A) Bharat Heavy Electricals Limited
(B) Coal India

(C) Steel Authority of India
(D) Rashtriya Ispat Nigam
(E) Answer Not Known

112. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a. | சிவப்பு மணல் குன்றுகள் | | 1. கற்திட்டைகள் |
| b. | சிறு அளவிலான கல்லால் ஆன செய்பொருள்கள் | | 2. நுண்கற்காலம் |
| c. | பெருங்கற்கால ஈமச்சின்னம் | | 3. தேரி |
| d. | ஆன்மா வந்து செல்லும் இடம் | | 4. ஈமத்தொட்டி |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

Match

| | | |
|---|---|---|
| a. | Red sand dunes | 1. Port holes |
| b. | Stone artefacts of small size | 2. Microliths |
| c. | Megalithic burials | 3. Teris |
| d. | Movement of spirit | 4. Sarcophagus |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) Answer not known

113. சிந்துவெளி எழுத்துக்கும் திராவிட / தமிழ் மொழிக்கும் இடையே ஒற்றுமை நிலவுவதை இனங்கண்டுள்ள ஆராய்ச்சியாளர்கள் யார் ?
(A) உ.வே.சாமிநாதர், ஜார் லி. ஹார்ட்
(B) ஆறுமுகம் நாவலர், தாமோதரம் பிள்ளை
(C) அருட்தந்தை ஹென்றி ஹெராஸ், அஸ்கோ பர்போலா, ஐராவரம் மகாதேவன்
(D) உ.வே. சாமிநாதர், ஆறுமுகம் நாவலர் மற்றும் தாதோதரம் பிள்ளை
(E) விடை தெரியவில்லை
The Researcnhers who found similarity between the indus script and the Dravidian / Tamil language are.
(A) U.V. Swaminatha Iyer, George L. Hart
(B) Arumuga Navalar, Damodharan Pillai
(C) Father Henry Heras, Asko Parpola and Iravatham Mahadeva
(E) Answer not known

114. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்துமுறை யாது ?
(A) ஆங்கிலம் (B) தேவநாகரி
(C) தமிழ்-பிராமி (D) கிரந்தம்
(E) விடை தெரியவில்லை

The name of the script used in the sangam age
(A) English (B) Devanagari
(C) Tamil-Brahmi (D) Granta
(E) Answer not known

115. சரியான விடையைத் தேர்ந்தெடு.
i. பொருள் பரிமாற்றத்திற்கான ஊடகமாக நாணயங்கள் சங்க காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.
ii. மௌரியா காலத்தில் வட இந்தியாவில் இருந்த சாதாரண மக்கள் பிராகிருத மொழி பேசினார்கள்.
iii. ரோமானிய ஆவனமான வியன்னா பாப்பிரஸ் முசிறி உடனான வணிகத்தைக் குறிப்பிடுகிறது.
iv. தமிழ் இலக்கண நூலான பத்துப்பாட்டில் திணை குறித்த கருத்து இடம்பெற்றுள்ளது.
(A) (i) (B) (ii)
(C) (i) மற்றும் (ii) (D) (iii) மற்றும் (iv)
(E) விடை தெரியவில்லை
i. Coins as a medium of exchange were introduced for the first time in the sangam age.
ii. Prakit was the language used by the common people in North India during the Mauryan period.
iii. Vienna Papyrus, a Roman document, mentions trade related to Muziri
iv. The concept of Tinnai is presented in the Tamil grammer work of Pathupaattu.
(A) (i) is correct (B) (ii) is correct
(C) (i) and (ii) is correct (D) (iii) and (iv) is correct
(E) Answer not known

116. கற்கள், செப்பேடுகள், நாணயங்கள், மோதிரங்கள் ஆகியவற்றின் மீது பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் .............. ஆகும்.
(A) இதிகாசங்கள் (B) கல்வெட்டுகள்
(C) இலக்கியம் (D) கல்வெட்டியல்
(E) விடை தெரியவில்லை
.............. are documents scripted on stones, copper plates, coins and rings.
(A) Epics (B) Inscriptions
(C) Literature (D) Epigraphy
(E) Answer not known

117. சரியான விடையைத் தேர்ந்தெடு.
(A) சேரர்கள் காவிரிப்பகுதியை ஆட்சி செய்தனர். அவர்களின் தலைநகர் உறையூர் ஆகும்.
(B) மாங்குளம் தமிழ்-பிராமி கல்வெட்டுக் குறிப்புகள் அரசன் கரிகாலனைக் குறிப்பிடுகின்றன.
(C) தமிழ்-பிராமி கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படும் வணிகன், நிகமா ஆகிய சொற்கள் வணிகர்களில் வெவ்வேறு வகையினரைக் குறிப்பிடுவதாகும்.
(D) உப்பு விற்றவர்கள் வணிகர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் வணிகத்துக்காக மாட்டு வண்டியில் தங்கள் குடும்பத்தினருடன் பயணம் செய்தார்கள்.
(E) விடை தெரியவில்லை
Find out the correct statement.
(A) The Cheras ruled over Kaveri delta and their capital was Uraiyur.
(B) The Maangulam Tamil-Brahmi inscriptions mention the king Karikalan
(C) The terms Vanikar and Nigama appear in Tamil-Brahmi inscriptions were different types of merchants.
(D) Salt merchants were called Vanikars and they travelled in bullock carts along with thier family.
(E) Answer not known

118. கீழ்கண்ட வாக்கியங்களை கவனி மற்றும் சரியான பொருத்தத்தை தேர்ந்தெடு :
(i) பாஸ்பரஸ் தாவரங்களுக்கு கிடைக்க மைக்கோரைசாக்கள் உதவுகின்றது
(ii) எல்லா தாவரங்களின் வேர்களில் மைக்கோரைசா கூட்டு வாழ்க்கை நடத்துகின்றது
(A) (i) சரி (ii) தவறு
(B) (i) தவறு (ii) சரி
(C) (i) மற்றும் (ii) தவறு
(D) (i) மற்றும் (ii) சரி
(E) விடை தெரியவில்லை
Consider the following statement and choose the correct combination :
(i) Mycorrhizae help in phosphorus mobilization
(ii) All the plants are associated with Mycorrhizae
(A) (i) is correct and (ii) is wrong
(B) (i) is wrong and (ii) is correct
(C) both (i) and (ii) are wrong
(D) both (i) and (ii) are correct
(E) Answer Not Known

119. இது தைராய்டு ஹார்மோன் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது
(A) சோடியம்
(B) அயோடின்
(C) பொட்டாசியம்
(D) கால்சியம்
(E) விடை தெரியவில்லை
_________ is the most essential component of thyroid hormone.
(A) Sodium
(B) Iodine
(C) Potassium
(D) Calcium
(E) Answer Not Known

120. வரிசை I உடன் வரிசை IIஐ பொருத்துக
வரிசை I வரிசை II

| | |
|---|---|
| a) கிளைக்காலிஸிஸ் | 1.ஆக்ஸிஜன் பயன்படுத்தப் படுவதில்லை |
| b) கிரெப் சுழற்சி | 2.ATP -க்கள் உருவாகிறது |
| c) எலக்ட்ரான் கடத்தல் சங்கிலி | 3.பைருவிக் அமில ஆக்ஸிஜனேற்றம் |
| d) நொதித்தல் | 4.சைட்டோபிளாசத்தில் நடைபெறுகிறது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை
Match list I and list II:

| List I | List II |
|---|---|
| (a) Glycolysis | 1. $O^2$ is not utilised |
| (b) Kreb's cycle | 2. ATP are produced |
| (c) Electron transport chain | 3. Oxidation of pyruvic acid |
| (d) Fermentation | 4.Occurs in cytoplasm |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |

(D) 2 4 1 3
(E) Answer Not Known

121. செல்லுக்கு உறுதி, வலு மற்றும் செல் பொருள்கள் நகர்தல் ஆகிய பணிகளை செய்யும் ஒரு புரத இழைகளால் ஆன இதன் பெயர் என்ன?
(A) லைஸோசோம்கள்
(B) கோல்கி உறுப்புகள்
(C) எண்டோபிளாச வலைகள்
(D) சைட்டோபிளாச எலும்புக்கூடு
(E) விடை தெரியவில்லை
Name the network structure gives shape, strength and help in cell movement
(A) Lysosomes
(B) Golgi bodies
(C) Endoplasmic reticulum
(D) Cytoskeleton
(E) Answer Not Known

122. கிளையாக்ஸிசோம்களை அபரிமிதமாகக் கொண்ட விதைகள்
(A) உலர் விதைகள்
(B) ஈர விதைகள்
(C) முளைக்கும் விதைகள்
(D) சுருங்கிய விதைகள்
(E) விடை தெரியவில்லை
The seeds which contain abundant glyoxysomes are
(A) Dry seeds
(B) Wet seeds
(C) Germinating seeds
(D) Shrunken seeds
(E) Answer Not Known

123. மைட்டோகாண்ட்ரியாவை பாதி சுயேட்ச்சையான செல் நுண்ணுறுப்புகள் என்று கூற காரணம்
(A) mRNA மற்றும் rRNA
(B) DNA மற்றும் RNA
(C) RNA மற்றும் ரைபோசோம்கள்
(D) DNA மற்றும் ரைபோசோம்கள்
(E) விடை தெரியவில்லை
Mitochondria are semi-autonomous organelles because they contain
(A) mRNA and rRNA
(B) DNA and RNA
(C) RNA and ribosomes
(D) DNA and ribosomes
(E) Answer Not Known

124. கீழ்கண்ட கூற்றை எண்ணிப் பார்க்க
1. இந்திய தலைமை வழக்கறிஞரின் பதவிகாலம் அரசியலமைப்பில் நிர்ணயிக்கப்படவில்லை
2. இந்திய தலைமை வழக்கறிஞரின் ஊதியம் அரசியலமைப்பில் நிர்ணயிக்கப்படவில்லை
கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் எது சரியானது?
(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1 மற்றும் 2
(D) 1 மற்றும் 2 அல்ல
(E) விடை தெரியவில்லை
Consider the following statements
1. The term of office of the Attorney General of India is not fixed by the constitution.
2. The remuneration of the Attorney General of India is not fixed by the constitution.
Which of the statements given above is/ are correct?
(A) 1 only
(B) 2 only
(C) Both 1 and 2
(D) Neither 1 nor 2
(E) Answer Not Known

125. கீழ்கண்ட கூற்றை கருதவும்.
I. ஆளுநர் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகிறார்
II. அவர் மத்திய அரசாங்கத்தால் நியமனம் செய்யும் நபர் ஆவார்.
III. வரைவு அரசியலமைப்புச் சட்டம் ஆளுநர் நியமனத்திற்கு மறைமுக தேர்தல் முறையை வழங்கியது
IV. அரசியலமைப்பு நிர்ணய சபை, ஆளுநர் தேர்தலுக்கு மறைமுக நியமன முறையை எடுத்துக் கொண்டது
சரியான விடையை தெரிந்தெடுக்க
(A) I மற்றும் II மட்டும் சரி
(B) I மற்றும் IV மட்டும் சரி
(C) I மற்றும் II மற்றும் IV மட்டும் சரி
(D) III மட்டும் சரி
(E) விடை தெரியவில்லை
Consider the following statements:
I. Governor is appointed by the President
II. He is the nominee of the Central Government
III. The Draft constitution provided for the indirect election of the Governor
IV. The Constituent assembly opted for the indirect appointment of the Governor
Choose the correct answer:
(A) I and II only correct
(B) I and IV only correct
(C) I and II and IV only correct
(D) III only correct
(E) Answer Not Known

126. இந்திய குடியரசு தலைவர் எதன் மீது ரத்து செய்கின்ற அதிகாரத்தை கொண்டிருக்கிறார்
I. சாதாரண மசோதா மீது
II. நிதி மசோதா மீது
III. அரசியலமைப்புச் சட்ட திருத்த மசோதா மீது
IV. மாநில சட்ட மசோதா மீது
மேறக்ண்டவற்றுள் எது சரியானது ?
(A) I மற்றும் IV மட்டும்
(B) IV மற்றும் III மட்டும்
(C) I, III மற்றும் IV மட்டும்
(D) II மற்றும் III மட்டும்
(E) விடை தெரியவில்லை
The Indian President has a veto power over
I. Ordinary bill
II. Money bill
III. Constitutional amendment bill
IV. State legislation bill
Which statement given above are correct.
(A) I and IV only
(B) IV and III only
(C) I, III and IV only
(D) II and III only
(E) Answer Not Known

127. மாநில அளவில் தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்பவர்
(A) தலைமை தேர்தல் ஆணையர்
(B) தலைமை தேர்தல் அதிகாரி
(C) உச்ச நீதிமன்ற நீதிபதி
(D) உயர் நீதிமன்ற நீதிபதி
(E) விடை தெரியவில்லை
The election process in the state level is supervised by
(A) Chief Election Commissioner
(B) Chief Electrol Officer
(C) Supreme Court Judge
(D) High Court Judge
(E) Answer Not Known

128. மாநகராட்சியின் அரசியல் ரீதியான தலைவர்

(A) சேர்மன் (B) மேயர்

(C) ஆணையர் (D) கவுன்சிலர்

(E) விடை தெரியவில்லை

Who is the political head of the Corporation ?

(A) Chairman (B) Mayor

(C) Commissioner (D) Councilor

(E) Answer Not Known

129. பின்வருவனவற்றுள் எந்த வாக்கியம் தவறாக இணைக்கப்பட்டுள்ளது எது?

A) விதி 53 - ஜனாதிபதியின் நிர்வாக அதிகாரம் பற்றி கூறுகிறது

B) விதி 54- ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் முறை பற்றியது

C) விதி 55 - ஜனாதிபதிக்கான தகுதிகள் பற்றி கூறுகிறது

D) விதி 56 - ஜனாதிபதியின் பதவிக் காலம் மற்றும் பதவி விலகல் பற்றியது

(E) விடை தெரியவில்லை

Which one of the following statement is not correctly matched?

A) Article 53 - deals with the Executive Authority of President

B) Article 54 - deals with the Election of the President

C) Article 55 - deals with the qualification of the President

D) Article 56 - deals with Term and Removal of the President

(E) Answer Not Known

130. மத சுதந்திர உரிமையின் கீழ் வரும் சட்ட விதிகள் யாவை?

(A) விதிகள் 19-22 (B) விதிகள் 23-24

(C) விதிகள் 25-28 (D) விதிகள் 29-30

(E) விடை தெரியவில்லை

Which are the articles come under the Right to freedom of Religion ?

(A) Articles 19-22 (B) Articles 23-24

(C) Articles 25-28 (D) Articles 29-30

(E) Answer Not Known

131. கருத்து (A) : இந்திய குடியரசுத் தலைவர் அரசின் செயலாட்சித்துறை தலைவராவார்.

காரணம் (R) : அவர் ராணுவத்தின் முப்படைத் தளபதி ஆவார்.

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, (A)ன் சரியான விளக்கம் (R).

(B) (A) மற்றும் இரண்டும் சரி, (A)ன் சரியான விளக்கம் (R) அல்ல.

(C) (A) சரி ஆனால் (R) தவறு.

(D) (A) தவறு ஆனால் (R) சரி.

(E) விடை தெரியவில்லை

Assertion (A) : The president of India is the excepting head of the state

Reason (R) : He is the Suprem Commander of the defence forces.

(A) (A) and (R) are true (R) is the correct explanation of (A)

(B) (A) and (R) are true but (R) is not correct explanation of (A)

(C) (A) is true, but (R) is false

(D) (A) is false, but (R) is true

(E) Answer Not Known

132. கீழ்கண்ட கூற்றில் இந்திய திட்டக் கமிஷனுக்கு எது சரியானவை?

I. இந்திய அரசியலமைப்புக்கு வரையறுக்கப்பட்டவை அல்ல

II. உறுப்பினர்கள் மற்றும் உதவித் தலைவர் நிரந்தர ஊழியர்கள் அல்ல

III. உறுப்பினர்களுக்கு குறைந்தளவு கல்வித்தரம் வேண்டியதில்லை

IV. உதவித் தலைவரை நியமிப்பது பிரதமமந்திரி

(A) I மற்றும் II (B) I மற்றும் III

(C) I, II, III மற்றும் IV (D) I மற்றும் IV

(E) விடை தெரியவில்லை

Which statement is correct for Indian planning commission ?

I. It is not defined in Indian Constitution

II. Members and Vice-Chairman of it do not have fixed working duration

III. Members do not require any minimum education

IV. Vice-Chairman should be appointed by the Prime Minister

(A) I and II (B) I and III

(C) I, II, III and IV (D) I and IV

(E) Answer Not Known

133. மாநிலங்களில் சாதாரண மசோதாவைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியானவை யாவை?

(a) ஆளுநர் மசோதாவிற்கு தன் ஒப்புதலை அளித்து, அந்த மசோதா சட்டமாகும்

(b) ஆளுநர் மசோதாவிற்கு தன் ஒப்புதலை நிறுத்தி வைக்கும் போது அந்த மசோதா முடிவடைகின்றது, சட்டம் ஆகாது

(c) ஆளுநர் மசோதாவை அவை அல்லது அவைகளுக்கு மறு பரிசீலனை செய்ய அனுப்பி, மசோதாவை அவை அல்லது அவைகள் நிறைவேற்றினால், ஆளுநரிடம் வரும்போது, அவர் ஒப்புதலை மறுக்கும் போது அந்த மசோதாவை அழித்துவிடுகின்றார்.

(d) ஆளுநர் மசோதாவை ஜனாதிபதியின் பார்வைக்கு அனுப்பலாம்

(A) a, c, d (B) b, c, d

(C) a, b, d (D) a, b, c

(E) விடை தெரியவில்லை

Which of the following statements are true with regard to ordinary bills in the State?

(a) The Governor may give his assent to the bill, the bill then becomes an act

(b) The Governor may withhold his assent to the bill, the bill then ends and does not become an act

(c) The Governor may return the bill for reconsideration of the house or houses again and again present it to the Governor, he can again refuse to give assent and kill the bill

